**செ. கு. எண்: 130** **நாள்: 03.08.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

இரங்கல் செய்தி – 3.8.2018

தமிழ்நாடு மற்றும் அஸ்ஸாம் மாநிலத்தின் முன்னாள் ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண்சிங் அவர்கள் தனது 85-வது வயதில் 1.8.2018 அன்று இயற்கை எய்தினார் என்ற செய்தியை அறிந்து மிகுந்த மன வேதனை அடைந்தேன்.

திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் ஜார்கண்ட் மாநிலத்தில் பிறந்தவர். இவர் தமிழ்நாட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்திலும், அசாம் மற்றும் மேகலாய மாநிலத்திலும், ஆளுநராக பதவி வகித்தவர். இதுமட்டுமின்றி மத்திய அமைச்சரவையிலும், பீகார் மாநில அமைச்சராகவும், பதவி வகித்த சிறப்புக்குரியவர்.

திரு. பீஷ்ம நாராயண்சிங் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**